**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 80** **நாள் : 10.07.2017**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு பணி 12.07.2017 முதல் 18.07.2017 வரை நடைபெறும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மத்திய அரசின் தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்தினை மேம்படுத்துதல் தொடர்பான மத்திய அரசு சட்டம் 2014 மற்றும் தமிழ்நாடு தெரு வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் தெரு வியாபாரம் முறைப்படுத்துதல்) விதிகளின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 15 மண்டலங்களிலுள்ள தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு பணி நடைபெற்றது.

தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு பணி முடிவுற்ற நிலையில், உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து புகைப்படத்துடன் கைரேகை எடுக்கப்பட்ட நபர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. அவ்வடையாள அட்டையினை சிறப்பு முகாம்களில் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டு வருகிறது. தெருவோர வியாபாரிகள் சிலர் புகைப்படத்துடன் கூடிய அடையாள ஆவணம் மற்றும் இருப்பிடத்திற்கான ஆவணம் சமர்ப்பிக்காமல், ஒரு மாத காலமாக நடைபெற்ற கைரேகை எடுக்கும் மையத்திற்கு வருகை புரியாமல் உள்ளனர். அவ்வாறு தெருவோரம் வியாபாரம் புரிந்து, கணக்கெடுக்கப்பட்டு கைரேகை எடுக்க தவறிய வியாபாரிகளுக்கு கடைசி வாய்ப்பாக சிறப்பு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி 15 மண்டலங்களில் 12.07.2017 முதல் 18.07.2017 வரை (காலை 11.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை) அமைத்து உரிய ஆவணங்களுடன் கைரேகை எடுக்கும் பணி நடத்தப்படவுள்ளது.

எனவே, மேற்படி திட்டத்தின் கீழ், கணக்கெடுக்கப்பட்டு கைரேகை எடுக்க தவறிய வியாபாரிகள் அவர்களது வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்தினை மேம்படுத்தி கொள்ளவும், இத்திட்டத்தினால் ஏற்படவுள்ள பலன்களை பாதுகாத்துக்கொள்ளவும், மேற்குறிப்பிட்ட காலத்தில் தங்களது கைரேகையினை பதிவு செய்துக் கொண்டு பயனடையுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**